**EC5145**

# எனது ஊர் - பாடல்கள்

*சிக்கு புக்கு ரயிலு,*

*குச்சு குச்சு ரயிலு,*

*எங்கூட வருது,*

*என் ஊரு வருது ..*

*பாருங்க, என் ஊர பாருங்க.*

*(சிக்கு புக்கு - 2 )*

*என்னோட வீடு*

*வீட்டச் சுத்தி ரோடு ,*

*ரோட்டோரம் ஓடு,*

*கோயில் குளம் பாரு,*

*பாருங்க, என் ஊர பாருங்க.*

*(சிக்கு புக்கு - 2 )*

*தெருவோரம் ஸ்கூலு,*

*தினம் வருவேன் பாரு,*

*மிட்டாய் வாங்கும் ஸ்டோரு,*

*பஸ் ஸ்டாண்ட் ஓரம் பாரு*

*பாருங்க, என் ஊர பாருங்க.*

*டோரா டோரா டோரா*

*ஊரு பக்கம் போறா*

*டோரா டோரா டோரா*

*ஊர பார்க்கப் .போறா*

*(டோரா – 2 )*

*வயலு பக்கம் போறா*

*நெல்லைப் பார்க்க ப◌ோறா.*

*ஏரி பக்கம் போறா*

*தண்ணீ பார்கக போறா*

*(டோரா – 2 )*

*வீதி பக்கம் போறா*

*வீட்டைப் பார்கக போறா*

*கடைவீதி பக்கம் போறா*

*கடையைப் பார்க்க போறா*

*(டோரா – 2 )*

*கோவில் பக்கம் போறா.*

*திருவிழா பார்க்க போறா*

*பள்ளி பக்கம் போறா*

*பாடம் படிக்கப் போறா.*